

தமிழ்நாடு அரசு

வாழ்வியல் திறன்கள்
மற்றும்
விழுமியக் கல்வி



ஆறாம் வகுப்பு

2025 - 2026

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

6th_Value Education Module.indd 1 31-03-2026 14:50:36

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2025

நூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2025

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

6th_Value Education Module.indd 2 31-03-2026 14:50:36

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

6th_Value Education Module.indd 3 31-03-2026 14:50:36



அறிமுகம்



படிப்போமா!



கலந்துரையாடல்



சிந்தனைப் பகுதி



தொடர்பணி



உங்களுக்குத் தெரியுமா?

6th_Value Education Module.indd 4 31-03-2026 14:50:36

முகவுரை

அன்பு மாணவச் செல்வங்களே!

அறிவும் திறமையும் மனிதனை வளர்ச்சிக்குத் தூண்டும். அதற்கும் மேலாக உயர் விழுமியங்களுடன் வாழ்தல் ஒருவரை முழு மனிதனாக்கும். ஒரு நல்ல சமூகம் உருவாகவும் அமைதியான வாழ்வு மலரவும் ஒவ்வொரு தனிமனிதனும் உயர் விழுமியங்களுடன் வாழ்தல் முதன்மையான தேவையாகும். இந்த வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி நூல் உங்களின் கல்விப் பயணத்தில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையின் அறைகூவல்களை எதிர்கொள்ளவும் சரியான முடிவுகளை எடுக்கவும் பிற மனிதர்களுடன் நல்லுறவைப் பேணவும் தேவையான அறநெறிகள், மனிதாபிமானம், சமூகப் பொறுப்புணர்வு, தேசப்பற்று போன்ற உயரிய பண்புகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும். பாடநூல்களில் உள்ள செய்திகளைத் தாண்டி, அன்றாட வாழ்வியலைப் புரிந்துகொள்ளவும் உங்களைச் சார்ந்துள்ள உலகின் மீது அக்கறையுடன் செயல்படவும் இத்தொகுப்பு வழிகாட்டும்.

"சுடர்விட்டு எரியும் ஒரு விளக்குதான், மற்றொரு விளக்கை ஏற்ற உதவும்" என்பது இரவீந்திரநாத் தாகூரின் கூற்று ஆகும். அவரது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், நீங்கள் கற்றுக்கொள்ளப்போவது வெறும் விதிகள் மட்டுமல்ல; அது உங்கள் மனத்தில் ஒரு நேர்மறை மாற்றத்தை விதைத்து, உங்களை ஒரு சிறந்த மனிதராக, பொறுப்புள்ள குடிமகனாக உருவாக்குவதற்கான அடித்தளமாகும். இந்த விழுமியங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையை ஒளிமயமாக்கி, உங்களையும் நீங்கள் சார்ந்துள்ள உலகத்தையும் மெருகேற்றும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டகத்தில் வாழ்வியல் திறன்கள், விழுமியங்கள், பாலினச் சமத்துவம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சமூக ஊடகத்தின் முறையான பயன்பாடு, சுகாதாரமான பழக்கவழக்கங்கள், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள்,நேர்மறை எண்ணங்கள், போதைப் பொருள்களின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்தும் வகையிலான கருத்துகள் அனைத்தும் கதை, உரையாடல், கடிதம் மற்றும் உண்மை நிகழ்வுகளாக விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

வாருங்கள்! இந்த மதிப்புமிகு பயணத்தில் இணைந்து, சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம்!

6th_Value Education Module.indd 5 31-03-2026 14:50:36

பொருளடக்கம்

வ. எண்	தலைப்பு	பக்க எண்
1	முதல் முயற்சி நம்மிடமிருந்து...	1
2	மிளிரும் மனிதநேயம்	5
3	உயர்ந்த உள்ளம்	8
4	தகைமைசார் தலைமை	10
5	அறத்தின் பாதை	13
6	உணவே மருந்து!	16
7	பசுமையே பூமியின் முகவரி	20
8	விழிப்புடன் இரு! விபரீதத்தைத் தடு!	23
9	தகவலின் தரம்! உயர்வுக்கு உரம்!	27
10	கவனம் தேவை!	30

6th_Value Education Module.indd 6 31-03-2026 14:50:36

1 முதல் முயற்சி நம்மிடமிருந்து...

ஊருக்கு உழைத்திடல் யோகம்–நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
– பாரதியார்

சமூகப் பொறுப்புணர்வு என்பது நாம் வாழும் சமூகத்தின்மீது அக்கறை கொண்டு,அதன்நல்வாழ்வுக்காகநம்மால்இயன்றபங்களிப்பைச்செய்வதாகும். சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதிலும் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.



கோடை விடுமுறையில் ஒரு நாள் மணி தன் நண்பன் கவினுடன் விளையாட விரும்பினான். எனவே, மணி, கவின் வீட்டிற்குத் தனது சைக்கிளில் சென்றான். அப்போது கவின் தனது வீட்டு வாசலில் பந்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். மணி அவனைப் பார்த்து, "கவின் விளையாட மைதானத்திற்குப் போகலாம் வாடா" என்று அழைத்தான். கவின் "சரி போகலாம்" என்றான்.



இருவரும் மைதானத்தை நோக்கிச் சென்றனர். செல்லும் வழியில் நிறைய மேடு, பள்ளங்கள் இருந்தன. முந்தைய நாள் வயதான ஒருவர் அந்தப் பள்ளத்தில் கால் இடறி விழுந்தது கவினின் நினைவுக்கு வந்தது. உடனே அவன் மணியை நோக்கி, "மணி இந்தச் சாலையில் இருக்கிற பள்ளங்களைப் பார்த்தாயா? நேற்று முதியவர் ஒருவர் கால் இடறி விழுந்துவிட்டார். இதைச் சரி செய்ய நாம் ஏதாவது செய்யலாமா? எனக் கேட்டான் கவின்.

6th_Value Education Module.indd 1 31-03-2026 14:50:37

மணி சிறிது யோசித்து, "நம்மால் என்ன செய்ய முடியும்? இது நம்மைப் போன்ற சிறுவர்கள் செய்ய வேண்டிய வேலை இல்லையே, கவின்" என்றான். உடனே கவின், "இது கடினமான வேலையாக இருந்தாலும், நம்மால் முடிஞ்சத செய்யலாமே மணி?" என்றான் அக்கறையுடன்.

கவினின் வார்த்தைகள் மணியைச் சிந்திக்க வைத்தன. சற்றும் யோசிக்காமல், "சரி வாடா, இந்தப் பள்ளங்களை மண்ணைப்போட்டுச் சரிசெய்வோம்" என்றான் மணி. உடனே இருவரும் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். கவின் ஒரு மண்வெட்டியை எடுத்து வந்தான். மணி தனது வீட்டிலிருந்து ஒரு கூடையைக் கொண்டுவந்தான்.



முதலில் அந்தப் பள்ளங்களில் உள்ள குப்பைகளை அகற்றியபின், கவின் மண்வெட்டியால் சாலை ஓரத்தில் குவிந்துகிடந்த மண்ணை அள்ளிப் பள்ளங்களில் நிரப்பினான். மணி அங்கே கிடந்த சிறு கற்களைக் கூடையில் எடுத்துவந்து அந்த மண்ணின் மேல் போட்டான். இவ்வாறாகத் தொடர்ந்து செய்தனர். அவர்கள் செய்வதைப் பார்த்த சிலர், முதலில் ஆச்சரியப்பட்டனர். ஒரு பெரியவர் தானாக முன்வந்து அவர்களுக்கு உதவினார். அவரைத் தொடர்ந்து இளைஞன் ஒருவன் சணல் பை

6th_Value Education Module.indd 2 31-03-2026 14:50:37

ஒன்றைக் கொண்டு வந்து கற்களை எடுத்துவர உதவினான். சிறிது நேரத்தில் அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்த வேறு சிலரும் அவர்களுக்கு உதவினர். இச்செயல் கவினுக்கும் மணிக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"ஒரு சின்ன முயற்சிகூட எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்னு இப்பதான் புரியுது" என்று மணி கூறினான். அன்று கவினும் மணியும் விளையாடவில்லை. ஆனால், அவர்கள் இருவரும் சேர்ந்து சமூகப் பொறுப்புணர்வுடன் மேடு பள்ளங்களைச் சரிசெய்தது, அந்தச் சாலையில் செல்லும் பலரது பாதுகாப்பை உறுதி செய்தது. அங்குள்ள பலரும் அவர்களுக்கு உதவ முன்வந்தது, அவர்கள் கொண்டிருந்த சமூக அக்கறையை வெளிப்படுத்தியது.



சமூக அக்கறை சார்ந்த செயல்களாக நீங்கள் நினைப்பவை எவை? ஏன்?



1. உங்கள் வளாகம் மற்றும் வகுப்பறைகளைத் தூய்மையாகப் பராமரிப்பதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?

2. திருமண விழாவில் உணவு வீணாக்கப்படுவதைப் பார்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

6th_Value Education Module.indd 3 31-03-2026 14:50:37

குப்பை இல்லா பள்ளி வளாகம் (Trash – Free School Campus)



உங்கள் பள்ளி வளாகத்தையும், வகுப்பறையையும் சுத்தமாக வைத்திருக்க ஒரு வாரத்திற்கான செயல் திட்டத்தை உருவாக்கி வருக.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ சமூகப் பொறுப்புணர்வு ❖ ஒருங்கிணைந்து செயல்படுதல் ❖ பொதுநலம்	❖ பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் ❖ நல்லுறவை மேம்படுத்துதல் ❖ பிரச்சினையைத் தீர்த்தல் ❖ முடிவெடுத்தல்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் – குறள் (666)

6th_Value Education Module.indd 4 31-03-2026 14:50:37

2 மிளிரும் மனிதநேயம்

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை – குறள் (315)



பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் என்பது, ஒருவரின் கருணையையும் பிறர் மீதான அன்பையும் வெளிப்படுத்துகிறது. மேலும், அது அவர்கள் அனுபவித்திருக்கக்கூடிய உணர்வுகளைப் போன்றே நாமும் உணர்வதாகும்.

மனிதர்கள் மட்டுமன்றி, அனைத்து உயிரினங்களுக்கு சமமான அன்பும் பாதுகாப்பும் தேவை. நமது வாழிடங்களில் வாழும் பல விலங்குகள் பலவிதமான ஆபத்துகளைத் தினமும் எதிர்கொள்கின்றன. அவற்றைப் பாதுகாக்கச் சிலர் விரும்புகிறார்கள். வேறு சிலர் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். அத்தகைய செயல்பாட்டு மனப்பான்மையுடன், தனது சிறிய முயற்சியால் பெரிய மாற்றத்தை உருவாக்கியவர்தான் சாந்தனு.

சாந்தனு, மகாராஷ்டிரா மாநிலத்தின் புனே நகரைச் சேர்ந்தவர். ஒரு நாள் இரவு, வாகனம் மோதி உயிரிழந்த நாயைப் பார்த்த நிகழ்வு, அவரது மனத்தை மிகவும் பாதித்தது. இந்தத் துயரமான நிகழ்வின் காரணமாக, அவர் சாலையில் திரியும் நாய்களைப் பாதுகாப்பதற்கான வழிகளை ஆராயத் தொடங்கினார்.



அதன் தொடர்ச்சியாக, ஒளிரும் (reflective) பட்டைகளை உருவாக்கி, தெரு நாய்களுக்கு அணிவித்தார். இவை இரவில் வாகனங்களின் ஒளியில் ஒளிர்ந்து, வாகன ஓட்டிகளுக்கு நாய்கள் அங்கிருப்பதைக் குறித்த எச்சரிக்கையைத் தந்தன. இதன்மூலம், வாகன விபத்துகளில் சிக்கி உயிரிழக்கும் நாய்களின் எண்ணிக்கை குறைந்தது.

6th_Value Education Module.indd 5 31-03-2026 14:50:38



தொடக்கத்தில் சாந்தனு தனது சொந்தச் செலவிலேயே இந்தத் திட்டத்தைத் தொடங்கினார். நாளடைவில் இது ஓர் இயக்கமாக வளர்ந்து பல தன்னார்வலர்களின் ஆதரவைப் பெற்றது. பின்னர் மோட்டோபாஸ் (Motopaws) என்ற அமைப்பை நிறுவி, நாட்டின் பல பகுதிகளில் இந்த முயற்சியை விரிவுபடுத்தினார்.

சாந்தனுவின் இந்தத் தன்னலமற்ற சேவை, தொழில்நுட்ப உலகின் தலைசிறந்த தொழிலதிபராய் விளங்கிய ரத்தன் டாடா அவர்களின் கவனத்தையும் ஈர்த்தது. அவர் சாந்தனுவின் வழிகாட்டியாகவும் ஆதரவாளராகவும் மாறினார். இது சாந்தனுவுக்கு மேலும் ஊக்கமளித்து, அவரது சேவையை விரிவடையச் செய்யும் வாய்ப்பை வழங்கியது. இந்த மனித நேயமிக்க செயல், தம்மைப் போலவே அனைத்து உயிரினங்களையும் நேசிக்கவேண்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

ஒரு சாதாரண மனிதன் மனதார நினைத்துச் செய்யும் சிறு செயலும், பல உயிர்களுக்குப் பாதுகாப்பை அளிக்கமுடியும் என்கிற நல்லதொரு செய்தியைச் சாந்தனுவின் செயல் நமக்கு உணர்த்துகிறது. இன்று அவரது முயற்சி, பல நகரங்களில் வாகன விபத்துகளிலிருந்து நாய்களைப் பாதுகாப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. நாய்களின் மீதான அவரது அக்கறையும் புதுமையான சிந்தனையும் செயல்பாடும் இன்று உலகெங்கும் பாராட்டப்படுகிறது.



உங்கள் மனத்தைப் பாதித்த நிகழ்வு ஒன்றைக் கூறவும். அந்த நிகழ்வில் எவ்வகை மாற்றத்தைக் கொண்டுவர விரும்புகிறீர்கள்? ஏன்?

6th_Value Education Module.indd 6 31-03-2026 14:50:38



மேற்கண்ட படம் உணர்த்தும் சூழலைக் குறித்துச் சிந்திக்க.

பிரதிபலன் பாராமல் பிறருக்கு உதவி புரிந்தோர் குறித்த தகவல்களைத் திரட்டுக.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ உயிரினங்களிடம் அன்பாய் இருத்தல் ❖ அன்பு காட்டுதல் ❖ உதவும் மனப்பான்மை	❖ பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் ❖ நல்லுறவை மேம்படுத்துதல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல். ❖ முடிவெடுத்தல்

பாலைப் பொழிந்துதரும் பாப்பா – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான் – அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா – பாரதியார்

6th_Value Education Module.indd 7 31-03-2026 14:50:38

3 உயர்ந்த உள்ளம்

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் – குறள் (410)

ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் இரக்கத்துடனும் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் நடந்துகொள்வது பிறரைக் கருத்தில் கொள்வதாகும்.



பள்ளி வளாகத்தில் மாணவர்கள் அனைவரும் கூடியிருந்தனர். அப்போது, புத்தக வாசிப்பின் மகிமையைத் தெரிந்துகொள்ளும் ஓர் அரிய வாய்ப்பாக, புத்தகத் திருவிழாவிற்கு அழைத்துச்செல்லப் பேருந்து வந்தது. அப்பள்ளியில் இருந்து ஐம்பது மாணவர்களும், இரண்டு ஆசிரியர்களும் புத்தகத் திருவிழாவிற்குப் புறப்படத் தயாரானார்கள். ஆறாம் வகுப்பு படிக்கும் கமலா கவலையுடன் இருந்தாள். கமலாவின் தோழி மகிழினி, "ஏன் கவலையாக இருக்கிறாய்?" எனக் கேட்டாள். "சுற்றுலா செல்லும் அளவிற்குப் பணம் இல்லாத காரணத்தால் நான் இதுவரை எந்த ஊருக்கும் சுற்றுலா செல்லவில்லை. இதிலும் எனது பெயர் இல்லை" என கமலா கவலையுடன் கூறினாள்.



உடனே மகிழினி, "வருத்தப்படாதே! நான் கடந்த ஆண்டு புத்தகத் திருவிழாவிற்குச் சென்று எனக்குத் தேவையான நிறைய புத்தகங்களை வாங்கிவிட்டேன். எனவே, இந்த ஆண்டு எனக்குப் பதிலாக நீ சென்று வர ஆசிரியர் ஆதிரையிடம் அனுமதி கேட்போம் வா!" என்று கூறி அழைத்துச் சென்றாள். மகிழினி ஆசிரியரிடம் கமலாவின் நிலைமையை எடுத்துக்கூறி, தனக்குப் பதிலாக அவளை அழைத்துச் செல்ல அனுமதி

6th_Value Education Module.indd 8 31-03-2026 14:50:38

வேண்டினாள். ஆசிரியர் மகிழினியின் பெருந்தன்மையைக் கண்டு மகிழ்ந்தார். பின் "நீங்கள் இருவருமே வரலாம். என்னருகே இடம் உள்ளது". என்று மகிழ்ச்சியுடன் கூறினார். "என்னருமை மகிழினி! பாராட்டுகள்! விட்டுக் கொடுப்பவர் சிறப்புடன் வாழ்வர். நீ பிறர் மீது அக்கறையுடன் இருக்கிறாய், உயர்ந்த உள்ளம் உனக்கு!" என்று பாராட்டினார்.



அனைத்து மாணவர்களையும் ஏற்றிக்கொண்டு பேருந்து புறப்பட்டது கமலாவின் முகம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. மகிழினியை கமலா நன்றியுடன் பார்த்தாள். மாணவர்கள் அனைவரும் மகிழ்வுடன் புத்தகத் திருவிழாவைக் கண்டு களித்தனர். புத்தகத் திருவிழாவைப் பார்வையிட்ட பின் அனைவரும் தாங்கள் பார்த்த புத்தகங்களைக் குறித்தே உரையாடிக் கொண்டிருந்தனர்.

நீங்கள் கண்டு களித்த புத்தகத்திருவிழா.

"விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை" இன்றைய தலைமுறைக்கு எவ்வளவு முக்கியம்?

உங்களுக்குப் பிடித்த நூல் ஒன்றினைப் படித்து அதன் மையக்கருத்தைக் கூறுக.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ அன்பு காட்டுதல் ❖ உதவும் மனப்பான்மை ❖ பிறரைக் கருத்தில் கொள்ளுதல்	❖ நல்லுறவை மேம்படுத்துதல் ❖ பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு – குறள் (783)

6th_Value Education Module.indd 9 31-03-2026 14:50:39

4 தகைமைசார் தலைமை

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு – குறள் (382)

தலைமைப்பண்புடையவர் அனைவரையும் அரவணைத்துச் செல்பவராகவும் உற்சாகம் அளிப்பவராகவும் இருக்க வேண்டும்; வெற்றி தோல்விகளைச் சமமாகப் பாவிப்பவராகவும் நேரிய சிந்தனையுடன் திட்டமிட்டு செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். தன்னையும் தன் குழுவினரையும் முன்னிலைப்படுத்தும் அனைவரும் தலைமைத்துவம் பெற்றவர்களே. குழுவினரில் யாரேனும் சரியாகச் செயல்படாத சூழ்நிலையில் அவருக்குத் தன்னம்பிக்கையூட்டி சிறப்பாகச் செயல்படச் செய்வதுதான் தலைமைக்கு அழகு.

இளமாறன், அவன் பயிலும் பள்ளியில் சிறார் கூடைப்பந்தாட்டக் குழுவின் தலைவன். ஒருநாள் அவன், தன் அணியினரிடம் கோபமாகப் பேசுவதைக் கண்ட அவனின் தந்தை, இளமாறனை அழைத்து, தனது இளமைக்கால நிகழ்வு ஒன்றினைக் கூறத் தொடங்கினார்.



"இதே பள்ளியில் நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது முதல் முறையாக விளையாட்டு மைதானத்திற்குச் சென்றேன். அங்கு ஏறக்குறைய 100 மாணவர்கள் இருந்தார்கள். மிகுந்த சத்தத்துடன் காணப்பட்ட அந்த மைதானம் ஒரு விசில் சத்தம் கேட்டவுடன் அமைதியானது. விசில் சத்தம் வந்த திசையை நோக்கி அனைவரும் திரும்பிப் பார்த்தபோது பயிற்சியாளர் வந்துகொண்டிருந்தார். உயர் வகுப்பு படிக்கும் மாணவர்கள் கூட அவரைப் பார்த்தவுடன் அமைதியாயினர். பின்னர் அனைவரும் அவர் முன், வரிசையில் வந்து நின்றனர்.



6th_Value Education Module.indd 10 31-03-2026 14:50:39



ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் பெயரிட்டு அழைத்துக் குழுக்களாகப் பிரித்தார். புதிதாகச் சேர்ந்த மாணவர்கள் ஏழு பேர் மட்டுமே இறுதியில் எஞ்சி இருந்தனர். அவர்களில் நானும் ஒருவன். எங்களை ஒவ்வொருவராக அழைத்து பெயர், வகுப்பு என அனைத்தையும் கேட்டுத் தனது ஏட்டில் எழுதிக்கொண்டார். எங்கள் ஏழு பேருக்கும் முதல் நாள் என்பதால் மைதானத்தைச் சுற்றி ஓடி வாருங்கள் என்று கூறினார்.



அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அவரது சொற்களையும் செயல்களையும் நான் கவனிக்கத் தொடங்கினேன். பின்பு, அவர் மிகவும் அன்பானவர் என்பதை நான் தெரிந்துகொண்டேன். பயிற்சி அளிக்கும் நேரத்தில் மட்டும் கண்டிப்பாக இருக்கும் அவர், பிற நேரங்களில் மிகுந்த நட்புணர்வுடன் இருப்பார். அப்பள்ளியில் பயின்ற அந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது நூறு போட்டிகளிலாவது நாங்கள் பங்கேற்று இருப்போம். வெற்றி, தோல்வி என எது வந்தாலும் எங்களை அரவணைத்து நல்வழிப்படுத்துவார். நாங்கள் எங்குச் சென்றாலும் அவரது பார்வையிலேயே எங்களை வைத்திருப்பார். நகைச்சுவை உணர்வு கொண்ட அவர், ஒரு நல்ல பண்பாளரும் ஆவார்.

ஒருமுறை, மாநில அளவில் எங்களது அணி போட்டியிட்டபோது நான் மிகவும் தடுமாற்றத்துடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அதைக் கவனித்த எங்களின் பயிற்சியாளர் என்னை அழைத்து, நீதான் அணியை முன்னின்று வழிநடத்த வேண்டுமென்றார். அதுவரை மனச்சோர்வுடன் இருந்த என்னை, ஊக்கமளித்துச் சிறப்பாகச் செயல்பட வைத்தவர் எங்கள் பயிற்சியாளர்தான். அப்போட்டியில் எங்கள் அணி முதல் பரிசு பெற்றது.



எங்களுக்குப் பரிசுகள் வழங்க மாண்புமிகு அமைச்சர், அரசு அதிகாரிகள் என பலரும் அந்த விளையாட்டு அரங்கிற்கு வந்திருந்தனர். மிகச் சிறப்பாக விழா தொடங்கியது. எங்களின் பயிற்சியாளரை, மேடையில் வந்து அமருமாறு

6th_Value Education Module.indd 11 31-03-2026 14:50:39



அழைத்தபோதும் எங்களுடனே அமர்ந்திருந்தார்.

எங்கள் பயிற்சியாளரைப் போலவே நீயும் உன் குழுவை வழி நடத்திச் செல்ல உன்னைப் பக்குவப்படுத்திக்கொள். புரிகிறதா இளமாறா?" எனக் கூறினார் தந்தை. அவர் கூறியதைக் கேட்ட இளமாறன் "நிச்சயமாக நானும் இதைக் கடைப்பிடிப்பேன் அப்பா" என்றான்.

உங்களுக்கு நன்கு தெரிந்த ஒருவரின் தலைமைப் பண்பு குறித்துப் பகிர்ந்துகொள்க.

கீழ்க்காணும் படத்தைக் காணும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?



உங்களின் தந்தை/ தாய் உங்கள் குடும்பத்தை எவ்வாறு தலைமையேற்று வழிநடத்துகிறார்?

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ கீழ்ப்படிதல் ❖ பிறரைக் கருத்தில் கொள்ளுதல் ❖ குழு உணர்வு ❖ விதிகளை மதித்தல் ❖ பாராட்டும் கலை	❖ நல்லுறவை மேம்படுத்துதல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ❖ முடிவெடுத்தல்

இன்பம் விழையான் வினைவிழையான் தன்கேளிர்
துன்பம் துடைத்துஊன்றும் தூண் – குறள் (615)

6th_Value Education Module.indd 12 31-03-2026 14:50:40

5 அறத்தின் பாதை

"அறம் செய விரும்பு"

–ஔவையார், ஆத்திசூடி

நேர்மையாக இருத்தல் என்பது மனித வாழ்வில் மிகவும் உயர்வான ஒரு பண்பு. இது ஒருவர் தனது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருப்பதைக் குறிக்கிறது. நேர்மை, ஒருவரின் வாழ்க்கையிலும் தனிப்பட்ட உறவுகளிலும் சமூகத் தொடர்புகளிலும் வலுவான அடித்தளத்தை அமைக்கிறது.

ஒருவர் நேர்மையானவராக இருக்கும்போது, அவர்மீது மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. நேர்மை என்பது வெறும் உண்மை பேசுவது மட்டுமன்று; தனது கடமைகளை நிறைவேற்றுவது, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது மற்றும் தவறான வழிகளில் செல்லாமல் இருப்பது போன்ற பல நல்ல செயல்பாடுகளையும் உள்ளடக்கியது. இது ஒருவரின் பண்புநலன்களின் வலிமையையும் விழுமியங்களையும் வெளிப்படுத்துகிறது.

சுருக்கமாகக் கூறுவதென்றால், நேர்மை என்பது ஒருவரின் ஆளுமைக்கு மெருகூட்டும் விலைமதிப்பற்ற பண்பு. இது தனிநபரின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் துணைபுரிகிறது.

ஓர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பாலு, அசோக் ஆகிய இரு நண்பர்கள் ஆறாம் வகுப்பு படித்து வந்தனர். அவர்கள் இருவரும் அன்றாடம் சேர்ந்தே பள்ளிக்குச் செல்வது வழக்கம்.



ஒருநாள் வழக்கம்போல் இருவரும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது, சாலையோரத்தில் ஒரு ATM கார்டு கீழே கிடந்ததைக் கண்டனர். அதன் அட்டையில் பின் நம்பரும் (PIN No.) எழுதப்பட்டிருந்தது.

6th_Value Education Module.indd 13 31-03-2026 14:50:40



இருவரும் அந்த ATM கார்டை அருகில் உள்ள வங்கிக்கு எடுத்துச் சென்று வங்கி மேலாளரிடம் ஒப்படைத்தனர்.

வங்கி மேலாளரும், ஊழியர்களும் இணைந்து ATM கார்டின் உரிமையாளரைக் கண்டுபிடித்து அவரிடம் ஒப்படைத்தனர். வங்கியில் இருந்த அனைவரும் மாணவர்களின் நேர்மையையும் பொறுப்புணர்வையும் பாராட்டி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். இச்செய்தி மறுநாள் செய்தித்தாளில் வந்தது. பள்ளியின் தலைமை ஆசிரியரும் அச்செய்தியை வாசித்தார். அன்று காலை வழிபாட்டுக் கூட்டத்தில் இரு மாணவர்களையும் அழைத்துப் பாராட்டினார்.





"நேர்மையாளர் கடை" (Honesty Shop)

"நேர்மையாளர் கடை" என்பது பள்ளி வளாகத்திற்குள் இருக்கும் ஆளில்லாக் கடைகள். இங்கு பேனாக்கள், பென்சில்கள், நோட்டுப் புத்தகங்கள், அழிப்பான்கள் போன்ற எழுதுபொருள்கள் விற்கப்படுகின்றன.



கடைக்காரர் இல்லை: மாணவர்களைக் கண்காணிக்க ஆசிரியரோ அல்லது ஊழியரோ யாரும் கடையில் இருக்க மாட்டார்கள்.

சுயசேவை: மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே எடுத்துக்கொள்வார்கள்.

6th_Value Education Module.indd 14 31-03-2026 14:50:40

பணம் செலுத்துதல்: ஒரு பெட்டி வைக்கப்பட்டு இருக்கும், அதில் மாணவர்கள் தாங்கள் எடுத்த பொருள்களுக்கான சரியான தொகையை விலைப்பட்டியலில் உள்ளபடி செலுத்த வேண்டும்.

கண்காணிப்பு இல்லை, இந்த முழு அமைப்பும் மாணவர்களின் நேர்மையின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே செயல்படும். இங்கு சிசிடிவி கேமராவும் கிடையாது.



குழந்தைகளுக்கு நேர்மையைக் கற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியம்



நேர்மையாக இருப்பது ஒரு தனிப்பட்டவரின் பொறுப்பா? அல்லது சமூகக் கடமையா?



அ) நேர்மையை எடுத்துரைக்கும் கதைகள் சிலவற்றைத் தொகுக்க.

ஆ) நேர்மையைக் கடைப்பிடிப்பதில் நீங்கள் சந்தித்த சிக்கலான தருணம், அதை நீங்கள் கையாண்ட விதம் குறித்துப் பகிர்க.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ நேர்மை ❖ சமூகப் பொறுப்புணர்வு ❖ சுய ஒழுங்கு	❖ பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ❖ முடிவெடுக்கும் திறன் ❖ தன்னை அறிதல்

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற – குறள் (34)

6th_Value Education Module.indd 15 31-03-2026 14:50:40

6 உணவே மருந்து!

"நோயின்றி வாழ்வதற்கான முதலாவது மருந்து உணவாகும்"

– ஹிப்போகிரட்டீஸ்



நல்வாழ்வு மேம்பாடு என்பது மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பின்பற்றவும் நோய்வாய்ப்படுவதைத் தடுக்கவும் உதவும் அனைத்து முயற்சிகளையும் குறிக்கிறது. இது தனிநபர்கள், மற்றும் ஒட்டுமொத்த மக்களின் உடலையும் மனத்தையும் சமூக நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்கான விரிவான அணுகுமுறையாகும். மேலும், இது ஆரோக்கியத்தை மதிப்புமிக்க சொத்தாகக் கருதி, தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் அதை அடைவதற்கும் பராமரிப்பதற்கும் மேற்கொள்ளும் கூட்டு முயற்சியுமாகும்.

மாலைநேரச் சூரியன் வானில் பல வண்ண மாற்றங்களை உருவாக்கி, பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. பாட்டியின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருந்தான் மதன். மகிழுந்துச்சத்தம் கேட்கவே, அப்பாவும் பாட்டியும் வந்துவிட்டார்கள் எனத் தெரிந்து கொண்டான். எப்பொழுதும்போலப் பாட்டியின் பையை அப்பா எடுத்துக்கொண்டு வந்தார். பெரிய மூட்டையாகத்தான் இருந்தது. பாட்டி வந்ததும் வீடே பரபரப்பாக மாறியது.



இரவு உணவு வேளை. பாட்டி குளித்து முடித்தபின்பு அனைவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். மதனின் அம்மா இணையத்தில் பார்த்துத் தெரிந்துகொண்ட புதுப்புது உணவு வகைகளையும் துரித உணவுகளையும் சமைத்து வைத்திருந்தார்.

6th_Value Education Module.indd 16 31-03-2026 14:50:40



ஆனால், பாட்டி அனைத்தையும் பார்த்துவிட்டு ரசஞ்சோறு மட்டும் சாப்பிட்டார். "என்ன பாட்டி? எங்க அம்மா புதுசு புதுசா நெறைய செஞ்சிருக்காங்க. நீங்க எதுவுமே சாப்பிடாம வெறும் ரசம் சோறு மட்டும் சாப்பிடறீங்க?" என்றபடியே மதன் புதுப்புது உணவு வகைகளையும் துரித உணவுகளையும் அளவுக்கு அதிகமாக உண்டான்.



"மதன் நான் இன்று நீண்ட தொலைவிலிருந்து வந்ததால் ரொம்ப பசித்தது. ஆனால், இங்கு இருக்கும் உணவு வகைகளைப் பார்த்தால், உடலுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை. இவை நம் உடலுக்குத் தீங்கு விளைவிப்பவை. அதனால் தான் ரசம் சாதம் மட்டும் சாப்பிட்டேன்" என்றார் பாட்டி.



"என்ன பாட்டி இப்படிச் சொல்றீங்க? இந்தச் சாப்பாடெல்லாம் எவ்வளவு ருசியா இருக்கு தெரியுமா? சாப்பிட்டுக்கிட்டே இருக்கணும்போல இருக்கு" என்றான் மதன். "அளவா சாப்பிடு" என பாட்டி சொன்னதையும் அவன் கேட்கவில்லை.

பாட்டி கூறுவதைக் கவனித்த மதனின் அம்மா, "மதன் ஆசைப்பட்டுக் கேட்டான் அதான். . . " என்று இழுத்தார். "என்னமோ போங்கள்" என்று சலிப்பாக எழுந்து சென்றார் பாட்டி.

சாப்பிட்ட சிறிது நேரத்தில் வயிற்று வலியால் துடித்தான் மதன். உடனே அம்மா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முற்பட்டார். அதற்குப் பாட்டி, "இஞ்சியும் கல்லு உப்பையும் தட்டிப் போட்டோ, சீரகத்தைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்தோ குடிக்கக் கொடுங்கள். பத்து நிமிடத்தில் வயிற்று வலி சரியாகிவிடும். அப்படி இல்லை என்றால் மருத்துவமனைக்குச் செல்லலாம்" என்றார். மதனின் அம்மா சீரகத் தண்ணீரைக் காய்ச்சி மதனுக்குக் குடிக்கக் கொடுத்தார்.



6th_Value Education Module.indd 17 31-03-2026 14:50:41

என்ன அதிசயம்! சீரகத் தண்ணீர் குடித்த பத்து நிமிடத்தில் வயிறு வலி குறையத் தொடங்கியது. பாட்டியின் ஆலோசனை பலன் அளித்ததால், பாட்டி மீதான மரியாதை மேலும் அதிகரித்தது.



மறுநாள் காலை, கையில் தேநீருடன் மதன் அருகே வந்தார் பாட்டி. "என்ன பாட்டி, இது கருப்பாக இருக்கிறது?" என்றான் மதன். "பல் துலக்கிவிட்டு முதலில் தண்ணீர் குடி. பிறகு வந்து இந்தத் தேநீரைக் குடி" என்றார் பாட்டி.

அரைமனதுடன் பல்துலக்கச் சென்றான் மதன். சிறிது நேரம் கழித்து, பாட்டி கொடுத்த இஞ்சி, ஏலக்காய், பட்டை, கருப்பட்டி சேர்த்த தேநீரைக் குடித்தான். சிறிது நேரத்தில் சுறுசுறுப்பாக உணர்ந்தான்.

பின்னர், தினந்தோறும் பாட்டி ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களை மதனுக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். தினசரி உடற்பயிற்சி, போதுமான உறக்கம் என மதனின் வாழ்க்கை முறையைப் படிப்படியாக மாற்றினார். மதனும் துரித உணவு வகைகளை விடுத்து, சத்தான உணவுப் பழக்கத்திற்கு மாறினான்..

நீர் அருந்தச் சிறந்த நேரம்



❖ காலை எழுந்தவுடன்	–	உடல் உள்ளுறுப்புகளைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.
❖ உடற்பயிற்சி முடிந்த பிறகு	–	இதயத்துடிப்பை இயல்பு நிலைக்கு கொண்டு வரும்.
❖ சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்	–	செரிமானத்திற்கு உதவும்.
❖ குளிக்கச் செல்லும் முன்	–	இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவும்.
❖ உறங்கச் செல்லும் முன்	–	உடலில் இழந்த திரவத்தை சமநிலைப்படுத்தும்.
❖ உடல் நலம் சரியில்லாத நேரத்தில்	–	உடலின் நீர்ச் சமநிலைக்கு உதவும்.
❖ களைப்பாக இருக்கும்போது	–	உடலின் ஆற்றலை மீட்க உதவும்.
❖ நோய் பரவும் சூழலில் இருக்கும்போது	–	நோய்த்தொற்றுகள் உடலில் பரவாமல் தடுக்கும்.

6th_Value Education Module.indd 18 31-03-2026 14:50:42

உண்பதற்காக வாழ்வதா? வாழ்வதற்காக உண்பதா? – கலந்துரையாடுக.

❖ உங்கள் பள்ளி ஆண்டுவிழாவில் பல்வேறு துரித உணவுகள் (Fast Food), இனிப்புகள் மற்றும் பாரம்பரிய உணவுகள் உள்ளன. நலவாழ்வை மேம்படுத்த விரும்பும் ஒரு மாணவராக, நீங்கள் எந்த வகையான உணவுகளைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?



❖ உங்கள் நண்பனின் உடல் பருமனைக் குறைக்கவும், அவனது மன நலனை மேம்படுத்தவும் நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

_____

_____

_____

உங்களின் பெற்றோர்களிடம் உணவுப் பொருள்களையும் அவற்றின் மருத்துவ குணங்களையும் கேட்டறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க..

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ நல்ல பழக்கங்கள் ❖ ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் ❖ முதியோருக்கு மரியாதை ❖ நன்மை, தீமையை வேறுபடுத்தி அறியும் திறன் ❖ ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துதல்	❖ தன்னை அறிதல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ❖ முடிவெடுத்தல்

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு – குறள் (945)

6th_Value Education Module.indd 19 31-03-2026 14:50:42

7 பசுமையே பூமியின் முகவரி

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் – குறள்(611)

காடுகளை வளர்த்தல் என்பது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் செய்யும் ஒரு முதலீடு. இது தனிநபர்கள், சமூக அமைப்புகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் எனப் பலரால் மேற்கொள்ளப்படுகிறது. அடர் மரங்களை உருவாக்குதல், தரிசு நிலங்களைப் பசுமையாக்குதல், நகரங்களில் மரக்கன்றுகளை நடுதல் என காடு வளர்த்தல் பல வழிகளில் நிகழ்கிறது. காடுகளை வளர்த்தலால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் மண் அரிப்பைத் தடுக்கவும் முடியும். மரங்கள் மழைவளத்தைப் பெருக்கிப் பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு வழிவகைசெய்து நம் வாழ்க்கைக்குத் தேவையான இயற்கையை வளமாக்கும்.

சென்னையில் உள்ள பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பில், பாலாஜி என்ற சிறுவன் வசித்து வந்தான். அவன் இயற்கையின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். ஆனால், அந்தக் குடியிருப்பு வளாகத்தில் சில பூந்தொட்டிகளைத் தவிர வேறு செடிகளோ, மரங்களோ இல்லை.



தனது பிறந்தநாள் அன்று, தான் சேமித்து வைத்த பணத்தில் சில மரக்கன்றுகளை வாங்கினான். தன் குடியிருப்பு வளாகத்தில் தனது வீட்டருகே அவற்றை நட விரும்பினான். ஆனால், அங்கு ஏற்கனவே சிமெண்ட் தளம் போடப்பட்டிருந்தது. எனவே, அவன் ஏமாற்றத்துடன் உட்கார்ந்திருந்தான்.



அப்போது அங்கு காவலாளியாக பணிபுரியும் முதியவர் வந்தார். அவனது முகம் வாடியிருந்ததைப் பார்த்து விசாரித்தார். பாலாஜி நடந்ததைச் சொன்னதும், முதியவருக்குப் பரிதாபமாக இருந்தது.

6th_Value Education Module.indd 20 31-03-2026 14:50:42



"தம்பி, கவலைப்படாதே. நாம முயற்சி பண்ணலாம்," என்று கூறிய முதியவர், பாலாஜியுடன் சேர்ந்து வளாகத்தின் தலைவரிடமும் அங்கு குடியிருப்பவர்களிடமும் பேசினார்.

பாலாஜியின் ஆர்வத்தையும், முதியவரின் முயற்சியையும் பார்த்த குடியிருப்பாளர்கள் சிலர் உதவ முன்வந்தனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து வளாகத்தில் சிமெண்ட் தளம் போடப்படாத சில இடங்களைத் தேர்ந்தெடுத்தனர். அங்கு சிறிய குழிகளைத் தோண்டி, பாலாஜி வாங்கிய மரக்கன்றுகளை நட்டனர்.

சில மாதங்கள்வரை அந்த மரக்கன்றுகள் வளர்வது மெதுவாக இருந்தது. பாலாஜி தினமும் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றினான். பெரியவர்கள் சிலர் அவ்வப்போது வந்து பாலாஜிக்கு உதவினர். ஒரு வருடம் கழித்து, அந்தச் சிறிய மரக்கன்றுகள் கொஞ்சம் வளர்ந்திருந்தன.

இரண்டு வருடங்களில், அந்த வளாகம் சிறிய வனம்போல மாறியது. மரங்கள் அடர்ந்து வளர்ந்ததால், பறவைகள் வந்து கூடு கட்டி வாழ்ந்தன. அந்தப் பகுதி இப்போது நிழலாகவும் வெப்பம் குறைந்தும் காணப்பட்டது. குழந்தைகள் மரங்களைச் சுற்றி விளையாடத் தொடங்கினர்.



ஒரு நாள், பாலாஜி படிக்கும் பள்ளிக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்துப் பேச ஒரு நிபுணர் வந்திருந்தார். பாலாஜி தனது குடியிருப்பு வளாகத்தைப் பசுமை வளாகமாக மாற்றியதைக் குறித்துப் பெருமையுடன் கூறினான். அந்த நிபுணர் பாலாஜியின் முயற்சியைப் பெரிதும் பாராட்டினார். "நீ சின்ன வயசுலேயே பெரிய விஷயத்தைச் செஞ்சிருக்க பாலாஜி. இதுதான் நகர்ப்புற வனம். நம்ம நகரங்களுக்கு இது ரொம்ப முக்கியம்," என்றார்.

6th_Value Education Module.indd 21 31-03-2026 14:50:42

பாலாஜிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தனது சிறிய முயற்சி, தான் வசித்த இடத்தையே பசுமையாக மாற்றிவிட்டது என்பதை நினைத்து அவன் பெருமிதம் அடைந்தான். அன்று அவன் நட்ட அந்தச் சிறிய மரக்கன்றுகள், இன்று அந்த அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தின் அடையாளமாக மாறிவிட்டன.



மரக்கன்றுகளை நடுதல் மற்றும் பசுமையைப் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சமூக ஊடகங்களின் பங்கு.



மரக்கன்றுகளை நடுதல் ஒரு பொழுதுபோக்காகவும், மன அமைதிக்கான வழியாகவும் இருக்க முடியுமா?



மாநில அரசும் பள்ளிக் கல்வித்துறையும் மரக்கன்றுகளை நடுவதற்காக மேற்கொண்ட செயல்பாடுகளை அறிந்து வரவும்.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ சமூகப் பொறுப்புணர்வு ❖ பிறரை மதித்தல் ❖ தலைமைத்துவம் ❖ முன்னெடுத்தல் ❖ பாராட்டுதல்	❖ நல்லுறவை மேம்படுத்துதல் ❖ முடிவெடுத்தல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

..... முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் – குறள் (619)

6th_Value Education Module.indd 22 31-03-2026 14:50:42

8 விழிப்புடன் இரு! விபரீதத்தைத் தடு!

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!"

– பாரதியார்

குழந்தைகள் மீதான துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு மிகவும் அவசியமான ஒன்றாகும். பாதிக்கப்படுபவர்கள் தங்களுக்கு நேரும் கொடுமைகளை வெளிப்படுத்தத் தயங்குவதாலும் சமூகத்தில் இது குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததாலும் பலர் இக்குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே, பாதிக்கப்படுபவர்கள் உதவி பெறும் முறைகள் குறித்தும் இச்செயல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அனைவரும் அறிந்திருப்பது அவசியமாகும்.

"வணக்கம் பிள்ளைகளா! எல்லாரும் சாப்பிட்டீங்களா?" என்று கேட்டுக் கொண்டே வகுப்பறைக்குள் நுழைந்தார் ஆசிரியர்.

"சாப்பிட்டோம் டீச்சர்..." என்று புன்னகையுடன் குழந்தைகள் தலையசைத்தனர்.

ஆண், பெண் இருபாலரும் பயிலும் அந்தப் பள்ளியின் ஆறாம் வகுப்பில் விழுமியங்கள் பற்றிக் கற்பிக்கத் தயாரானார் ஆசிரியர். பின்னர் "நேற்றைய வகுப்பில் நீங்கள் நன்னெறிக் கதைகளைக் கேட்டீர்கள் அல்லவா!. உங்களுக்குள் குழுவாக இணைந்து நீங்கள் கேட்ட நீதிநெறிக் கதைகளும் சொன்னீர்கள் நன்று. இன்றைய வகுப்பில் குழந்தைகள் மீதான துன்புறுத்தல்கள் பற்றி நான் உங்களுக்குச் சொல்லப் போறேன்." என்றார்.



6th_Value Education Module.indd 23 31-03-2026 14:50:43

மாணவர்கள் அனைவரும் கவனமுடன் கேட்கத் தொடங்கினர். குழந்தைகள் மீது ஏற்படும் துன்புறுத்தல்களை ஆசிரியர் பட்டியலிட்டார். "உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ ஒரு குழந்தையைப் பாதிக்கச் செய்யும் எந்த ஒரு செயலும் துன்புறுத்துதல்தான். உடல்ரீதியாக





துன்புறுத்துதலும் அடிப்படைத் தேவைகளைப் புறக்கணிப்பதும் குழந்தைகளுக்கு எதிரான துன்புறுத்தல்கள் ஆகும். ஒரு குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்புவதும் குற்றமாகும். உங்களுக்கோ அல்லது உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்கோ இதுபோன்ற செயல்கள் நடந்தால், அச்சப்படாமல் உங்கள் பெற்றோர்களிடமோ அல்லது ஆசிரியரிடமோ தெரிவிக்க வேண்டும்," என்றார் ஆசிரியர்.

தொடர்ந்து அவர், "குழந்தைகளின் உடல் பாகங்களை வைத்துக் கிண்டல் செய்வது, விரும்பத்தகாத விதமாகத் தொடுவது, தவறான வார்த்தைகள் பேசுவது, தவறான படங்கள் காட்டுவது போன்ற செயல்களும் துன்புறுத்துதலில் அடங்கும்."





"நாம் ஒரு நல்ல செயல் செய்ததற்காக மற்றவர்கள் நம்மிடம் கைகுலுக்குவது பாதுகாப்பான தொடுதல். நம் பெற்றோர்களிடம் நாம் எப்போதும் இத்தகைய தொடுதலை உணர முடியும். ஆனால், அதற்கு மாறாக, யாராவது உங்கள் உடல் பாகங்களை விரும்பத்தகாத முறையில் தொடுவதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. இவை பாதுகாப்பற்ற தொடுதல் ஆகும். தவறான பார்வையோடு, தவறான வார்த்தை பேசுபவர்களிடம்

6th_Value Education Module.indd 24 31-03-2026 14:50:45

இருந்து தள்ளியே இருக்க வேண்டும். ஒரு தொடுதல் உங்களுக்குச் சங்கடமாகவோ அல்லது பயமாகவோ இருந்தால், உடனே 'தொடாதீர்கள்!' என்று உரக்கச் சொல்ல வேண்டும். நடந்த விஷயத்தை உங்கள் பெற்றோரிடமோ அல்லது ஆசிரியரிடமோ தெரிவிக்க வேண்டும்.



மேலும், 1098 என்ற இலவச அழைப்பு எண்ணிலும் நீங்கள் புகார் அளிக்கலாம். இந்த எண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் மற்றும் கொடுமைகளுக்கான புகார் எண் ஆகும். தவறான எண்ணத்தில் உங்களை அணுகும் நபருக்குத் தண்டனை பெற்றுத் தர போக்சோ சட்டம் (POCSO Act) உள்ளது. இது பதினெட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்கான முக்கியமான சட்டமாகும்," என்று ஆசிரியர் விளக்கினார்.

பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் குறித்த உங்களின் புரிதல்.



துன்புறுத்துதலில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் ஆண்களா? பெண்களா? ஏன்? சிந்திக்கவும்.



உங்களுக்குப் பாதுகாப்பானவராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் நீங்கள் கருதும் நபர்கள் யார் யார்?

6th_Value Education Module.indd 25 31-03-2026 14:50:45

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ பிறர் மீது அக்கறை கொள்ளுதல் ❖ சுய கட்டுப்பாடு ❖ நன்மை தீமையை வேறுபடுத்தி அறியும் திறன் ❖ தனிநபர் கண்ணியம்	❖ பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல் ❖ தன்னையறிதல் ❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ❖ முடிவெடுத்தல்

"ஒவ்வொரு நொடியும்
விழிப்புணர்வுடன் இரு ."

உதவி எண்கள்

குழந்தை உதவி மையம் : 1098

கல்வித் தகவல் மையம் : 14417

பெண்கள் ஹெல்ப்லைன் : 181



6th_Value Education Module.indd 26 31-03-2026 14:50:45

9 தகவலின் தரம்! உயர்வுக்கு உரம்!

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் – குறள் (198)



பயனுள்ள தகவல் தொடர்பு என்பது தகவல், கருத்துகள் மற்றும் உணர்வுகளைப் பிறருக்குத் தெளிவாகப் புரிய வைப்பதாகும். இது, ஒருவர் கூறுவதைக் கவனமாகக் கேட்டு, பின்னர் அதற்குரிய பதிலைத் தெளிவாகக் கூறுவதாகும். இது உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் பயன்படுகிறது.



கயல் : அருவி! உன்னிடம் ஒரு முக்கியமான தகவல் சொல்லணும்.

அருவி : சொல்லு கயல் ! என்ன தகவல்?

கயல் : அடுத்தவாரம் நம் பள்ளியில் நம்ம வகுப்பு சார்பாக சிறிய நாடகம் போடச் சொன்னாங்க. அதுக்கான தலைப்பு "பயனுள்ள தகவல் பரிமாற்றம்".

அருவி : அப்படீன்னா என்ன கயல்?

கயல் : நாம பேசும் போது நம்ம கருத்துகளைச் சரியாக, தெளிவாக, கேட்பவர் புரிந்து கொள்கிற மாதிரி பேசணும். அதைப் பள்ளியிலும் வீட்டிலும் நண்பர்களோட பேசும்போதும் கடைப்பிடிக்கணும்.

அருவி : ஓ! நான் சில சமயம் அம்மாவிடம் என் ஆசைகளைச் சரியாகச் சொல்ல முடியாம, வேற மாதிரி சொல்லி இருக்கேன். அது நல்ல தகவல் பரிமாற்றம் இல்லையா?



கயல் : ஆமாம்! எதைப் பேசுறோம், எப்படிப் பேசுறோம், எப்போ பேசுறோம், யார்கிட்ட பேசுறோம் – இதெல்லாம் முக்கியம். இதைத்தான் பயனுள்ள தகவல் பரிமாற்றம் என்று சொல்கிறோம்.

அருவி: இதுக்கு ஓர் எடுத்துக்காட்டு சொல்ல முடியுமா?

6th_Value Education Module.indd 27 31-03-2026 14:50:46

கயல் : சொல்கிறேன்! நீ ஒரு நாள் விளையாட்டுப் பாடவேளையில், "நாங்க விளையாடப் போகணும்! எங்களை அனுப்புங்க"என்று ஆசிரியரிடம் கேட்டது உனக்கு ஞாபகம் இருக்கா? அதை, நீ எப்படிக் கேட்டு இருக்கணும்னா "ஐயா, இப்போ எங்க வகுப்பு கால அட்டவணைப்படி விளையாட்டு நேரம். நாங்க இப்ப விளையாடப் போகலாமா?" என்று கேட்டிருந்தா நல்லா இருந்திருக்குமே!.





அருவி : ஓ! அதுக்காகத்தான் "சிறந்த கவனிப்பாளர்கள்தான் சிறந்த தகவல் தொடர்பாளராக இருக்க முடியும்" என்று சொல்றாங்க போல!

கயல் : சரியாகச் சொன்னாய் அருவி! இது போன்ற சிறந்த கருத்துகளை நம்முடைய நாடகத்தில் சொல்லணும்.

அருவி : ஹா! ஹா!! சரி, நம்ம நாடகத்துக்கான பயிற்சியை இன்னைக்கே ஆரம்பிக்கலாமா?

கயல் : ஓ! சிறப்பா ஆரம்பிக்கலாமே!

அருவி : நீ சொல்றது சரிதான் கயல்! நான் புரிஞ்சுக்கிட்டேன். இனி நாம பேசும்போது, நல்ல சொற்களோடும் மரியாதையோடும் தெளிவாகவும் பேசணும். அப்படித்தானே!

கயல் : அப்படியேதான்! இன்னும் ஒரு முக்கியமான தகவல். நாம பேசுறது எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு மத்தவங்க பேசும்போது நாம் கேட்பதும் முக்கியம். ஒருவர் பேசும்போது மிகுந்த கவனத்துடன் கேக்கணும்.



6th_Value Education Module.indd 28 31-03-2026 14:50:46



பிறர் பேசுவதைக் கவனம் சிதறாமல் கேட்பதற்கான உத்திகள்.



வார்த்தைகள் இல்லாமல் ஒருவரால் திறம்படத் தொடர்பு கொள்ள முடியுமா? எப்படி?

"நீங்கள் சொல்லும் வார்த்தைகளைத் தாண்டி உங்களின் உண்மையான எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை உடல்மொழி வெளிப்படுத்தும்".



1. வகுப்பறையில் பாடம் தொடர்பான சந்தேகங்களை ஆசிரியரிடத்தில் கேட்டு விளக்கம் பெற்றிருக்கிறாயா? ஆம் எனில் ஒரு நிகழ்வை எழுதுக. இல்லை எனில் எதனால் என்பதை எழுதுக.

_____

_____

2. பொருத்தமான சொற்களை மட்டுமே பயன்படுத்திப் பேச வேண்டும். ஏன்?

_____

_____

3. பிறர் பேசுவதைக் கவனம் சிதறாமல் கேட்பதற்கான உத்திகள் யாவை?

_____

_____

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ பிறரைக் கருத்தில் கொள்ளுதல் ❖ பாராட்டுதல் ❖ பிறரை மதித்தல்	❖ பயனுள்ள தகவல் தொடர்பு ❖ நல்லுறவை மேம்படுத்துதல்

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது – குறள் (419)

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் – குறள் (643)

6th_Value Education Module.indd 29 31-03-2026 14:50:46

10 கவனம் தேவை!

"இணையக் குற்றங்களில் எச்சரிக்கையாக இருப்போம்,
எதிர்காலச் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்போம்."

இணையக் குற்றங்கள் (Cybercrimes) என்பவை டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் சட்டவிரோத செயல்களைக் குறிக்கின்றன. 21ஆம் நூற்றாண்டின் புதிய யதார்த்தமாக மாறிவிட்ட இக்குற்றங்கள், புவியியல் எல்லைகளைத் தாண்டி, எங்கும் எந்த நேரத்திலும் தனிநபர்கள் அல்லது அமைப்புகளைக் குறிவைக்கின்றன.

தகவல்களைத் திருடுதல், பண மோசடி, ஆள்மாறாட்டம், தீங்கு விளைவிக்கும் மென்பொருள்களைப் (Malware) பரப்புதல், இணைய அச்சுறுத்தல்கள், பாலியல் வன்முறை, இணைய பயங்கரவாதம் போன்ற பல வடிவங்களில் இணையக் குற்றங்கள் நடைபெறுகின்றன.

கடன் மோசடிகள், வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் திருடுதல், தனிப்பட்ட தரவுகளைத் திருடி தவறாகப் பயன்படுத்துதல், சமூக ஊடகங்கள் மூலம் அச்சுறுத்துதல் போன்றவை இணையக் குற்றங்களாகும்.



கணியனூர் என்னும் ஊரில் தாமரைக்கண்ணன் வாழ்ந்து வந்தார். அவர் ஓர் அரசு அலுவலர். அவரின் மகன் குமரன் ஆறாம் வகுப்புப் படித்து வந்தான்.

அவன் தன் தந்தையிடம், "அப்பா இன்னைக்குச் சமூக அறிவியல் ஆசிரியர், "நாளை நாம் தகவல் திருட்டுனா என்னன்னு பார்ப்போம்" என்று கூறினார். அப்படினா என்னப்பா?" எனக் கேட்டான். "நல்ல கேள்விதான் குமரா. சொல்கிறேன் கேள். ஒருநாள் என் நண்பர் ஒருவரின் அலைபேசிக்கு இரவு சுமார் 11.40 மணியளவில் ஒரு குறுஞ்செய்தி வந்தது.



அதில் ரூபாய் இருபதாயிரம் எடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. என்னவென்று அவர் யோசிப்பதற்குள்

6th_Value Education Module.indd 30 31-03-2026 14:50:47

மற்றுமொரு இருபதாயிரம் ரூபாய் எடுக்கப்பட்டதாகச் செய்தி வந்தது. முதல் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் அடுத்த அதிர்ச்சியில் செய்வதறியாது திகைத்தார்" என்று தாமரைக்கண்ணன் கூறிக்கொண்டு இருக்கும்போதே... "அப்புறம் என்ன நடந்தது அப்பா" எனக் கேட்டான் குமரன். அடுத்தநாள் காலையில் இதைப்பற்றி என்னிடம் தெரிவித்தார்.



உடனே நாங்கள் இருவரும் சென்று காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். மேலும், வங்கிக்கும் சென்று புகார் அளித்தோம். பல மாதங்கள் கழித்து அவருடைய பணம் மீட்கப்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது" என்று முடித்தார் தாமரைக்கண்ணன்.

"அது எப்படி அப்பா அவருக்குத் தெரியாமல், பணம் எடுத்தாங்க?" என்று வியப்புடன் கேட்டான் குமரன்.

"அதுவா குமரா... இதுதான் இணையம் மூலமாக நம் தகவலைத் திருடிப் பணம் எடுக்கறது. அதனால, தானியங்கி எந்திரத்தில் பணம் எடுக்கும்பொழுது ATM Card-ஐ செருகும் இடத்தில் வேறு எந்த அந்நியப் பொருளும் இல்லை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்" என்றார் .



மேலும், ATM Card-ஐ பயன்படுத்தித் தானியங்கி எந்திரத்தில் பணம் எடுக்கும்பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய சில தகவல்களைச் சொன்னார் குமரனின் அப்பா.

- பின் நம்பரை (PIN Number) ATM Card-இன் பின்புறம் எழுதக்கூடாது.
- நம் ATM Card-ஐ பிறர் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

6th_Value Education Module.indd 31 31-03-2026 14:50:47

- PIN Number – ஐ வேறு யாரிடமும் பகிரக்கூடாது.
- ATM Card – ஐ பயன்படுத்திப் பணம் எடுப்பதற்கு பிறரின் உதவியை நாடக்கூடாது.
- ATM Card – இன் பதினாறு இலக்க எண்,அதன் பின்புறம் உள்ள CVC/CVV Number போன்றவற்றைப் பிறருடன் பகிரக்கூடாது.
- நம் கைப்பேசிக் குறுஞ்செய்தியில் வரக்கூடிய தேவையற்ற இணைய இணைப்புகளைக் (Link) கிளிக் செய்யக் கூடாது.

"இதையெல்லாம் நாம முறையா செஞ்சா, நம்ம பணம் நம்மகிட்ட பாதுகாப்பா இருக்கும். புரியுதா குமரா?" என்றார் அப்பா. "நல்லாவே புரிஞ்சுது அப்பா. இதனை நானும் என் நண்பர்களுக்குக் கூறுவேன் என்றான்" குமரன்.



"இணையப் பயன்பாடு மனிதகுல வளர்ச்சிக்கே! வீழ்ச்சிக்கே!!"–விவாதிக்க



இணையம் உண்மையிலேயே நம்மை ஒன்றிணைக்கிறதா? அல்லது தனிமைப்படுத்துகிறதா? – சிந்திக்க



பணம் எடுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்த உங்களின் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துக.

விழுமியங்கள்	வாழ்வியல் திறன்கள்
❖ பொதுநலம் ❖ தன் விழிப்புணர்வு ❖ தன்னம்பிக்கை ❖ சமூகப் பொறுப்புணர்வு	❖ பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ❖ முடிவெடுத்தல்

நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரைந்துறையும்
அஞ்சாப் புறம்கிடக்கும் நீர்ப்பாம்பு
நெஞ்சில் கரவுடையார் தம்மைக் கரப்பர்
கரவார் கரவிலா நெஞ்சத் தவர். – ஔவையார், மூதுரை

6th_Value Education Module.indd 32 31-03-2026 14:50:47



"நான் உங்களுக்கான காற்றைச் சுத்தம் செய்கிறேன், சூரியனின் வெப்பத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கிறேன், மண்ணைப் பாதுகாக்கிறேன். நான் எதுவும் எதிர்பார்க்காமல் இதைச் செய்கிறேன்." நீங்கள் எனக்காக என்ன செய்வீர்கள்?

இப்படிக்கு

மரம்....

6th_Value Education Module.indd 33 31-03-2026 14:50:47

வாழ்க்கைத் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி – வகுப்பு 6

ஆக்கம்

வல்லுநர்

முனைவர் மு.லெட்சுமணன்,
மேனாள் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், (ப.நி.,),
வரலாற்றுத்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.–05.

ஒருங்கிணைப்பாளர்கள்

திருமதி ஏ.ஜெகதீஸ்வரி,
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

முனைவர் சீ. பிரபு,
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை– 6.

மேலாய்வு

திருமதி.அ.ஜெபா
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை– 6.

முனைவர் நா. வளர்மதி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை ,வேலூர் மாவட்டம்

உருவாக்கக் குழுவினர்

செல்வி. சு.அரும்பு மொழி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
ராணிப்பேட்டை

திருமதி. ப. சிலம்பரசி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தருமபுரி மாவட்டம்.

திருமதி ப. கலைச்செல்வி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி,காஞ்சிபுரம் மாவட்டம்.

திருமதி பு.கமலி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை– 6.

திரு. ரெ.சுப்பிரமணியன்,
முதுகலை ஆசிரியர்,
அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி, நந்தனம், சென்னை– 6.

திரு.இரா. ராஜசேகர்,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ந.சுப்பையாபுரம், விருதுநகர்.

திரு.தே.சிவகணேஷ்,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, மிட்டூர் திருப்பத்தூர்.

முனைவர் க. சுரேஷ்,
பட்டதாரி ஆசிரியர்,
குமார இராஜா முத்தையா மேல்நிலைப்பள்ளி, அடையாறு

முனைவர். இரா . இராமசாமி,
தலைமையாசிரியர்,
திருப்புரம்பியம், தஞ்சாவூர் மாவட்டம்.

திரு.செ.கந்தன்,
முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை,
ஈரோடு மாவட்டம்.

திரு. பா. முத்துப்பாண்டி,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, பள்ளப்பட்டி.திண்டுக்கல் மாவட்டம்

முனைவர் த. சாவித்திரி,
முதுகலைஆசிரியை
அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்மாவட்டம்.

திருமதி எம்.கவிதா,
முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, வீராணம், சேலம்.

முனைவர்.சு. கீதாகுமாரி,
இடைநிலை ஆசிரியர்,
அரசுபெண்கள் மேல்நிலைப்பள்ளி, செங்கல்பட்டு.

திரு.பி.பிரபாகர்,
இடைநிலை ஆசிரியர்,
நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அம்மாப்பேட்டை, சேலம்.

திரு.கே.முனுசாமி,
பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.

திரு.எஸ்.மாரியப்பன்,
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

திரு.பா. பாலசுப்ரமணியபாரதி,
ஜே.ஆர்.சி. கன்வினர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியதச்சூர், திண்டிவனம், விழுப்புரம்.

பக்க வடிவமைப்பு & ஓவியம்

திரு. ஜாண்ஸ்மித் வே.சா.

திரு. மதன் ராஜ். ர

திரு. மாணிக்கராஜ் பிரபாகர். ம. ஆ

திரு. கி. வீரவேல் முருகன், ஓவிய ஆசிரியர்,
அ.ஆ.தி.ந.மே.ப., வண்டுராயன்பட்டு, கடலூர்.

திரு. டி. துரை, ஓவிய ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.ப., பாரிவாக்கம், திருவள்ளூர்.

வடிவமைப்புக் குழு மேற்பார்வை

திரு. ம. அமல்ராஜ்,
பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை 6.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

6th_Value Education Module.indd 34 31-03-2026 14:50:47